OS: 16/2020

Date: 18.09.2024

பெயர் :முனுசாமி

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>-** வாதி தரப்பில்

எனது முதல் விசாரணை வாக்குமூலத்தின் 7 வது பத்தியில் எனது தந்தை எனக்கு 1470 சதுரடி நிலம் தான செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதனை நான் எனது பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தானசெட்டில்மெண்டில் குறிப்பிட்டுள்ள சொத்தினையும் சேர்த்துதான் பாகப்பிரிவினை ஆவணத்தில் காட்டி தான் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 4 ம் பிரதிவாதியான எனது தம்பி கணேசன் அவரது கடன் சுமையால் சொத்தினை 6 ம் பிரதிவாதி ராஜாவுக்கு 05.02.2016 தேதியில் கிரயம் செய்துகொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்து அழைப்பானை சார்வு செய்யப்பட்ட பின்பு 4 ம் பிரதிவாதி அவரது மனைவி பெயரில் 05.03.2020 தேதியில் 6 ம் பிரதிவாதிக்கு விற்ற சொத்தினை மீண்டும் கிரயம் பெற்றுள்ளார் என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த 47 செண்ட் சொத்தினை 4 ம் பிரதிவாதி தான் ஓட்டி வருகிறார் என்றால் சரியல்ல. எனது பதிலுரையில் சொத்தினை யார் ஓட்டுகிறார்கள் என்பதை குறித்து சொல்லாமல் மறைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எங்கள் மீது பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருக்கிறாரா என்றால் இல்லை. வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக என்னிடம் பாகப்பிரிவினை குறித்து கேட்டாரா அல்லது அவரது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் நேரில் கேட்கவில்லை, வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது.

இந்த பாக வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது பதிலுரையில் தாவா சொத்து விவரம் பொய்யானது என எப்படி சொல்கிறேன் என்றால் பொய் என சொல்லவில்லை, பாகம் பிரித்த நிலையில் அவரவர்கள் சொத்து அவரவர்கள் அனுபவத்தில் உள்ளது. சீர்வரிசை என்னென்ன செய்தோம் என்றால் எனது அக்காவிற்கு நகை போட்டோம், மாடு

வாங்கிகொடுத்தோம், நிலம் வாங்குவதற்கு பணமும் கொடுத்தோம். மேற்படி விவரங்களை எனது பதிலுரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சீர்வரிசை என்பது பெரியவர்கள் விருப்பபட்டு செய்வது என்றும், சொத்தில் உரிமை என்பது சட்டப்படியான உரிமை என்று சொன்னால் சரியல்ல, எனது அக்கா சீர்வரிசை பெற்றுக்கொண்டார். எனது தந்தைக்கும், வாதியின் தந்தைக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து வாதியை விட்டு விட்டு நாங்கள் செய்துகொண்ட பாகப்பிரிவினையானது ஏற்புடையது அல்ல அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எங்களுக்குள் எழுதிகொண்ட பாக ஆவணமும் 4 மற்றும் 6 ம் பிரதிவாதிகள் செய்துகொண்ட கிரய ஆவணங்களும் செல்லதக்கதல்ல என வழக்குரையில் வாதி பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2, 3, 4 ஆகிய ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்மந்தப்பட்டது என எந்த இடத்திலாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ரெக்கார்டில் உள்ளது. பி.வா.சா.ஆ.2, 3, 4 ஆவணங்கள் குறித்து எனது பதிலுரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் மேற்படி பி.வா.சா.ஆ.2, 3, 4 ஆவணங்களை குறித்து பதிலுரையில் எதுவுமே சொல்லாமல் தற்போது நான் சொல்லியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை பத்திரமான பி.வா.சா.ஆ 15 ஐ அனுசரித்து தான் மற்ற பட்டா, சிட்டா ஆவணங்கள் பி.வா.சா.ஆ.19, 10, 22 ஆகிய ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாதியை மறைத்து வாரிசு சான்று பெற்றுள்ளோம் என்று சொன்னால் மறைத்து வாங்கவில்லை, நான் வாதியை கூப்பிட்டு கேட்டபோது நீங்களே பண்ணிகொள்ளுங்கள் நான் சொத்திற்கு வரவில்லை என்று சொன்னார். மேற்படி விவரத்தை நான் எனது பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, வாரிசு சான்று வாதியை விட்டு விட்டு வாங்கியது போன்று தான் அவரையும் பாகப்பிரிவினையில் விட்டு விட்டு நாங்கள் எங்களுக்குள்ளாகவே செய்துகொண்டோம் என்றால் எனது அக்காவே எங்களை பாகம் செய்துகொள்ள சொன்னார். வாதி வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி அவருக்கு உரிய பாகத்தை வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:- இல்லை.

ஒப்பம்/-DW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.